**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.104/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 3 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் . | நாகரத்தினம்மாள் | மதம் . | |
| க/பெ . | வீரராகவலு(லேட்) | ஜாதி . | |
| வயது . | 65 | கிராமம் . | |
| தொழில் | | வட்டம் . | |

ஏற்கனவே வாதி தரப்பு ஆவணம் வா.த.சா.ஆ. 1 முதல் 5 வரை குறியிடப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணை ஏற்கனவே எடுக்கப்பட்டது. தற்போது கூடுதல் ஆவணம் தாக்கல் செய்வதற்கு மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 6.2.2002ல் என் பெயரில் உள்ள கனிணி கிரைய பத்திர சான்றிட்ட நகலை (அதன் அசல் என்னடம் தான் உள்ளது) வா.த.சா.ஆ.6 குறியிடுகிறேன். குடும்ப அட்டை அசலோடு ஒப்பிட்டு வா.த.சா.ஆ. 7 குறியிடுகிறேன். மின்சார கட்டண ரசீதுகள் (2) வா.த.சா.ஆ. 8 மற்றும் 9 குறியிடுகிறேன். கடந்த 22.6.2001ல் நான் செலுத்திய சொத்து வரி ரசீது வா.த.சா.ஆ.10 குறியிடுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**